அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரக ஆணையரின் நேர்முக உதவியாளர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திரு ஆர்.எல்.பாஸ்கர்.,

ந.க.எண். அ1/ 2166 /2020 நாள். 27 .07.2020

பொருள் : பணிவரன் முறை – திருமதி இரா.சத்தியவதி இளநிலை உதவியாளர் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015–2016, 2017–2018ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நேரடி போட்டித் தேர்வில் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து உத்தரவுகள் – தொடர்பாக.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மந்தணக் கடித எண்.1151/PSD-H1/2019, நாள் 18.02.2019.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ1/13769/2017, நாள் .11.12.2018 மற்றும் 21.12.2018.
3. அரசாணை (1டி) எண் 100, பொது (மறுவாழ்வு –1)த் துறை, நாள் 25.04.2013.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ1/2166/2019, நாள் 28.02.2019.

*****

ஆணை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கு 2015–2016, 2017–2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நேரடி போட்டித் தேர்வில் இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்ட தெரிவாளர் திருமதி இரா.சத்தியவதி இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு அந்த 13.03.2019 தேதி முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை ஒன்றில் காணும் இவரது பணி ஒதுக்கீட்டு உத்தரவில், இவரது பணி நியமனம் தற்காலிகமானது என்றும், மேலும் இவருக்கு பணிவரன்முறை செய்யும் பட்சத்தில், அவ்வுத்தரவில் கீழ்க்கண்ட பத்தியைக் குறிப்பிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hone`ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services/2015–2016, 2017–2018 Recruitment.

எனவே, மேற்படி தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின்படி கீழ்க்கண்ட விபரப்படி பணிவரன் முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளராக பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | ஆர்.சத்தியவதி, இளநிலை உதவியாளர் | 13.03.2019 முற்பகல் | 13.03.2019 முற்பகல் |

பணிவரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலம் தொடர்ச்சியான

பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/–ஆர்.எல்.பாஸ்கர்
நேர்முக உதவியாளர் (நிர்வாகம்)

பெறுநர்
திருமதி இரா.சத்தியவதி இளநிலை உதவியாளர்,
அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு
வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5.

நகல் 1. தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை– 6.
2. இருப்புக் கோப்பு
3. உபரி.

27/7/2020
கண்காணிப்பாளர்